International Journal of Linguistics and computational Applications (IJLCA)
Volume 13, Issue 4, October – December 2026
ISSN 2394-6385(Print)
ISSN 2394-6393(Online)

# செவ்வாயின் நற்பலன்கள்

ஆ.ஆறுமுகம்[#1], முனைவர் என்.ஜி.குமரன்[*2]
[1]Research Scholar, [2]Assistant Professor
[1,2] Department of Astrology, Vels University (VISTAS), Pallavaram, Chennai – 600117, India

**கருத்தியல்** — உயர்ந்த உத்தியோகம் என்பது எல்லோருடைய கனவாகும் உயர்ந்த உத்தியோகமான ராணுவத்தில் உயர்ந்த பதவி காவல் துறையில் நல்ல வேலை மற்றும் மருத்துவ நிபுணர்கள் ஆவதற்கு செவ்வாய் கிரகம் தரும் நற்பலன்களாகும் அதைப் பற்றிய சிறிய கண்ணோட்டம்.

***திறவுக்கோல் —*** *செவ்வாய்; ஜாதகர்; நட்சத்திரம்.*

## 1. முன்னுரை

பழைய மன்னர் அரசாட்சி முறையில் தளபதி, மற்றும் வீரர்கள் செவ்வாய் கிரகம் நல்ல நிலையில் இருப்பவர்களாக கருதப்பட்டுள்ளது. அதே போல தற்காலத்தில் இராணுவ வீரர்கள், காவல் துறை அதிகாரிகள் மற்றும் மருத்துவர்கள் ஜாதகத்தில் செவ்வாய் நல்ல நிலையில் இருக்கும் என்று ஜோதிட நூல்கள் தெரிவிக்கின்றன. மருத்துவ நிபுணர்களைப் பற்றி இந்த கட்டுரை விவரிக்கிறது.

## 2. மருத்துவ நிபுணர்களாவதற்கு செவ்வாயின் முக்கியத்துவம்

சகோதரர், தைரியம், வீரத்திற்கு காரகன், சமையல் வேலை, நெருப்பு, மண்பாண்டம், ரியல் எஸ்டேட் தொழில், காவல் துறை, இராணுவம், மருத்துவம், படைத்தலைவர், போர் வீரர், உடலில் தசைகள், எலும்புகள் இவைகளுக்கு காரணமானவர் செவ்வாய் ஆகும்.

செவ்வாய் 6, 10, 11ல் நின்றால் அனைத்தும் மங்களமாகவே இருக்கும். பல பொருட்கள் செல்வம் எல்லாம் அடைந்திடுவான்.

## 3. செவ்வாயினால் ஏற்படும் யோகங்களும், பலன்களும்

- செவ்வாயுடன் நாலோனும் (4ம் அதிபதி) இரண்டோடனும் (2ம் அதிபதி) சம்பந்தப்பட்டு நன்கு பலமடைந்தால் அந்த ஜாதகன் மருத்துவ படிப்பு
- பலம் பெற்ற செவ்வாய் 6, 10ம் பாவத்துடன் தொடர்பு
- உச்சம் பெற்ற செவ்வாய் மகரத்தில் இருக்க அவ்வீட்டு அதிபதி கேந்திரத்தில் ஏறிட ருசப யோகம் ஏற்படுகிறது. இதனால் தைரியம், சாகசம், துணிச்சல், வெற்றி, உடல் பலம், முயற்சி ஏற்படுகிறது.
- செவ்வாயும், குருவும் சேர்ந்து கேந்திரங்களில் கூடினால் குரு மங்கள யோகம் ஏற்படுகிறது.
- சௌபாக்கியம், சந்துஷ்டி, செல்வம், சம்பத்து, வீரம், சாகசம் முதலியன ஏற்படும்
- செவ்வாயும், குருவும் நேர் கேந்திரமானால் கஜகேசரி யோகம் ஏற்படும். இதனால் பகைவர்களை எளிதில் வெல்வார்கள். செவ்வாயும், புதனும், மேஷம், மிதுனம், கன்னி, விருச்சிகம், மகரம் இவற்றில் சேர்க்கையானால் அந்த ஜாதகன் தொழில் கல்வி பெற முடியும் மருத்துவராகும் வாய்ப்பு அதிகம்.


DOI: 10.30726/ijlca/v13.i4.2026.134029

- செவ்வாய் பத்தாம் அதிபதியாகி, 9ம் அதிபதியுடன் சம்பந்தப்பட்டு பத்தில் இருந்தால் தொழிலில் மேன்மை அடைந்திடுவான்.

## 4. செவ்வாயின் பிற பெயர்கள்

செவ்வாய்க்கு பௌமன், அங்காரகன், சேய், மங்களன், குஜன், உதிரன், வக்கிரன், செந்தீவண்ணன் ஆகிய பெயர்களும் உண்டு. உடலில் ஓடும் ரத்த ஓட்டம் செவ்வாயின் காரகத்துவம் நாம் பிறந்த மண்ணிற்கு செவ்வாய் காரகனாதால் பூமிகாரகன் என்றும் சொல்வார்கள் வெப்பம், கோபம், எரிபொருள், ராஜதந்திரியும் செவ்வாயின் முக்கிய காரகத்துவங்கள். ஆகையால் மருத்துவ நிபுணர்கள், படைத்தளபதிகள், காவல்துறை அதிகாரிகள், அரசியல் தலைவர்கள், ஜெயில் அதிகாரிகள் ஆகியோர்களின் ஜாதகங்களில் செவ்வாயின் பலம் ஓங்கியிருக்கும்.

**ஜாதகம் - 1**

| | | | |
|---|---|---|---|
| சூரி புதன் சனி | செவ் லக் | | |
| சுக்,குரு கேது | ராசி இருப்பு சூரியன் 1-11-16 | | |
| | | | ராகு |
| , | | | சந் |

| | | | |
|---|---|---|---|
| சனி | குரு லக் | செவ் | |
| சூரி சந் கேது | நவாம்சம் | | |
| புதன் சுக் | | | ராகு |
| | | | |

| | | |
|---|---|---|
| பெயர் | - | B1 |
| பிறந்த தேதி | - | 10-04-1998 |
| நேரம் | - | 6.30 AM |
| ஊர் | - | புதுச்சேரி |
| லக்கினம் | - | மேஷம் |
| ராசி | - | கன்னி |
| நட்சத்திரம் | - | உத்திரம் |

- செவ்வாய் லக்கினத்தில் ஆட்சி அதி உச்சம்
- பௌர்ணமி சந்திர யோகம்
- ராகு குரு மற்றும் சுக்கிரனின் பார்வையில்
- கேதார யோகம், ராஜ யோகம், ருச்சாக்க யோகம்
- 4ம் அதிபதி பௌர்ணமி சந்திரன் தசாபுத்தி காலத்தில், அதி உச்சம் பெற்ற செவ்வாய் காலங்களில் உயர் கல்வி கற்று MS பட்டம் பெற்றுள்ளார்
- குரு, சனி பரிவர்த்தனை

***தசாபுத்தி***

செவ்வாய் தசை - 27-03-2010 முதல் 27-03-2017 - 16வயது - 23 வயது

ராகு தசை - 27-03-2017 முதல் 27-03-2030 - 23 வயது - 41 வயது

விதிகளின்படி

உச்ச செவ்வாய் லக்கினத்தில், அதனால் செவ்வாய் தசையில் உயர்கல்வி கிடைக்கப்பெற்றது

குரு பார்வை பெற்ற ராகு தசையில் நல்ல வேலை, செல்வம் கிடைத்தது.

**ஜாதகம் - 2**

| | | | |
|---|---|---|---|
| | சந் சனி | | |
| கேது | ராசி சூரி 3-11-3 | | சூரி,புதன் சுக்,செவ் |
| | | | லக் ராகு |
| | குரு | | |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | நவாம்சம் | | |
| | | | |
| | | | |

| | | |
|---|---|---|
| பெயர் | - | R1 |
| பிறந்த தேதி | - | 13-08-1988 |
| நேரம் | - | 07.10 AM |
| ஊர் | - | ஹைதெராபாத் |
| லக்கினம் | - | சிம்மம் |


DOI: 10.30726/ijlca/v13.i4.2026.134029

ராசி - மேஷம்

நட்சத்திரம் - அஸ்வினி

- சந்திரன், அஸ்வினி நட்சத்திரத்தில் உள்ளார்
- செவ்வாய், சூரி, புதன், சுக்கிரன் ஆட்சி பெற்ற குருவின் 5ம் பார்வையில் புனிதமடைகிறார்
- குரு பார்வை பெற்ற சுக்கிர தசையில் உயர்கல்வி கிடைக்க பெற்று MD பட்டம் பெற்றார்.

**தசாபுத்தி**

12ல் அமர்ந்துள்ள தசையான 29-01-2004 முதல் 2024 வரை உள்ள காலகட்டத்தில் விரைய செலவாக உயர்கல்வி கிடைக்கப்பெற்றது

சூரிய தசையில் அரசாங்க வேலை கிடைக்க வாய்ப்புள்ளது.

## 5. விதிகளின்படி

ராசிக்கு 1ம் இடமான மேஷத்தில் அஸ்வினி நட்சரத்தில் சந்திரன் அமர்ந்துள்ளார். மேலும் சூரியன், செவ்வாய் இணைவு மருத்துவராக தொழில் அமைந்தது.

## 6. முடிவுரை

ஒருவர் ஜாதகத்தில் செவ்வாய் ஆட்சி, உச்சம் பெற்று 6, 10ம் அதிபதி தொடர்பு மற்றும் நட்சத்திரங்களான அஸ்வினி, பரணி, பூசம், அஸ்தம் நட்சத்திர தொடர்புகள் மருத்துவர்களாக ஆகும் வாய்ப்பு அதிகம்.

### பார்வை நூல்கள்

[1] S. P. ராஜாராம், செவ்வாய் தரும் யோகபலம். மதுரை: ஸ்ரீ ரங்கநாயகி பதிப்பகம்.

[2] பாலசுப்ரமணியன், *சாதகாலங்காரம்*. சென்னை: திருமகள் நிலையம், ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

[3] S. Venkatesh, *Planetary Analysis for Mechanical Engineers*. [வெளியீட்டிடம்]: Paper Publication, ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

[4] மு. மாதேஸ்வரன், *ஜோதிட ஆராய்ச்சி திரட்டு*. [வெளியீட்டிடம்]: விஜயா பதிப்பகம், ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

[5] S. P. பாலசுப்ரமணியன், *ஜோதிட சித்தர்களின் நுட்பங்கள்*. [வெளியீட்டிடம்]: நர்மதா பதிப்பகம், ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

[6] திரு. வேங்கடாச்சியார், *மங்களேசுவரியம்*. [வெளியீட்டிடம்]: ஸ்ரீ செண்பகா பதிப்பகம், ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

[7] ராமய்யங்கார், *குடும்ப ஜோதிடம்*. சென்னை: தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

[8] கே. பார்த்தசாரதி, *ஜோதிட ரத்னாகரம்*. சென்னை: நர்மதா பதிப்பகம், ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

[9] காளிதாசர், *உத்ரகாலாம்ருதம்*. குமாரஸ்வாமி, தமிழ் மொழிபெயர்ப்பு, ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

[10] வி. தமிழண்ணல், *ஆய்வில் அறிமுகம்*. மதுரை: செல்லப்பா பதிப்பகம், ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

[11] நாரணன், *சம்பூர்ண குடும்ப ஜோதிடம்*. [வெளியீட்டிடம்]: கிரியேட்டிவ் ஏஜென்சி பிரைவேட் லிமிடெட், ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

[12] முகந்தன் முரளி, *ஜோதிட விடிவெள்ளி*. பள்ளிபாளையம்: மகரிஷி பதிப்பகம், ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

[13] கோபிகிருஷ்ணன், *லக்ன கோட்சார பலன்கள்*. சென்னை: குமரன் பதிப்பகம், ஆண்டு குறிப்பிடப்படவில்லை.



DOI: 10.30726/ijlca/v13.i4.2026.134029